செ.வெ.எண்: 18 நாள்:06.09.2019

**தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரத்தில் நடைபெற்ற சுதந்திர போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாள் விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வாகனத்தின் மூலம் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம் தேசிய ஊட்டச்சத்து திட்டம் குறித்த விழிப்புணர்வு குறும்படங்களை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜு அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரத்தில் தமிழக அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறை மூலம் சுதந்திர போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 148வது பிறந்த நாள் விழா வ.உ.சிதம்பரனார் நினைவில்லத்தில் 05.09.2019 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜு அவர்கள் கலந்துகொண்டு, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வாகனத்தின் மூலம் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம் தேசிய ஊட்டச்சத்து திட்டம் குறித்த விழிப்புணர்வு குறும்படங்களை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜு அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவு பொருட்கள் வழங்கி வந்தார்கள். மேலும் பிறந்த குழந்தைக்கு ஏற்படும் ரத்தசோகையை தடுப்பதற்காக பல்வேறு சத்து நிறைந்த பொருட்களை வழங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு குழந்தையின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். குறிப்பாக அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகளுக்கு தேவையான சத்துணவு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய ஊட்டச்சத்து மாத விழா இந்த மாதம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் பிறந்த குழந்தை முதல் 1000 நாட்கள் வரையுள்ள குழந்தைகளுக்கு இரத்தசோகை, வயிற்றுப்போக்கு, கை கழுவி சுத்தமாக இருத்தல், ஊட்டச்சத்து வழங்குதல் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று ஓட்டப்பிடாரத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வாகனத்தின் மூலம் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம் தேசிய ஊட்டச்சத்து மாதம் கொண்டாடுதல் தொடர்பாக குழந்தைகள் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு குறும்படங்கள் துவக்கி வைக்கப்பட்டது. இந்த வாகனம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கு சென்று குழந்தைகள் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி (TAC TV) மூலம் உள்ளூர் தொலைக்காட்சிகளிலும் குழந்தைகள் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு குறும்படங்கள் ஒளிபரப்பப்படும். பொதுமக்கள் தங்களது குழந்தைகளுக்கு தேவையான சத்தான பொருட்களை வழங்கி ஆரோக்கியமான சந்ததியினரை உருவாக்க வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன், கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஞானகௌரி, சமூக நல அலுவலர் திருமதி.தனலட்சுமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.சீனிவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.மோகன், மாவடட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.சுதாகர், துணைத்தலைவர் திரு.கனேஷ்பாண்டியன், ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் திரு.ரகு, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ராமராஜ், முக்கிய பிரமுகர்கள் திரு.அய்யாத்துரைபாண்டியன், திரு.வினோபாஜி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.நி.சையத் முஹம்மத் (செய்தி), திரு.ரா.ராமசுப்பிரமணியன் (விளம்பரம்) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**